# சுதந்திரன்

SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2010
கார்த்திகை 19
முஹறம் 14
புதன் (5-12-1979)
நிறுவியது 1947
புத்தகம் 33
இதழ் 53
விலை சதம் 50


அடக்குமுறைச் சட்டங்களை அகற்று! ★ அரசியல் கைதிகளை விடுதலை செய்! ★ பத்திரிகைத் தணிக்கையை அகற்று! ★ சித்திரவதைகளை உடனே நிறுத்து!

# அரசின் மனச்சாட்சியை தட்டியெழுப்பிட உண்ணாவிரதம் பிரார்த்தனை!

## டிசெம்பர் ஒன்பதில் நடைபெறுகிறது

தற்போது அமுலிலுள்ள அடக்குமுறைச் சட்டங்களான அவசரகாலச் சட்டம், பயங்கரவாத தடுப்பு (தற்காலிக) ஏற்பாடுகள் சட்டம், அத்தியாவசிய பொதுச்சேவைகள் சட்டம் ஆகியவற்றை அகற்றும் படியும், இச்சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யும்படியும், மறுக்கப்பட்டுள்ள ஏனைய மனித சுதந்திரங்களை மீண்டும் மக்களுக்கு வழங்கும்படியும் கோரி அரசின் மனச்சாட்சியைத்தட்டி யெழுப்புமுகமாக எதிர்வரும் 9ம்திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் உண்ணாவிரதமும் பிரார்த்தனையும் நடைபெறுகிறது.

இனங்களுக்கிடையே நீதி, சமத்துவத்துக்கான இயக்கத்தின் வடபிரதேச கிளையின் ஆதரவுடன் நடைபெறும் இந்த உண்ணாவிரதத்திலும் பிரார்த்தனையிலும், தமிழர் கூட்டணி உட்பட ஏனைய இடதுசாரிக் கட்சிகளும், தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் மகளிர் பேரவை போன்ற இயக்கங்களும், கட்சி சார்பற்ற அறிஞர்களும் பங்குபற்றுகின்றனர்.

மனித உரிமைகளின்பால், மக்களுக்கு ஆர்வத்தையும், அக்கறையையும் தூண்டு முகமாக மனித உரிமை நாளான டிசெம்பர் 10க்கு முதல் நாளான டிசெம்பர் 9ம் திகதியை உண்ணாவிரத நாளாக தேர்ந்தெடுத்துள்ளனர்.

இந்த உண்ணாவிரதத்துக்கும், பிரார்த்தனைக்கும் பூரண ஆதரவு அளிப்பது என்றும், அதில்பங்கு கொள்வது என்றும் யாழ்ப்பாண மாநகரசபை முடிவு செய்துள்ளது. யாழ் மேயரும், உறுப்பினர்களும் இந்த உண்ணாவிரதத்தில் ஈடுபடுவார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியின் கட்டுப்பாட்டிலுள்ள ஏனைய உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களும் உறுப்பினர்களும் இதிலே பங்கேற்பர் என்று தெரிய வருகிறது.

யாழ் மாநகரசபை மனித உரிமை உண்ணாவிரதத்தை ஆதரிக்க வேண்டுமென்ற தீர்மானத்தைகூட்டணியின் முஸ்லிம் உறுப்பினரான இமாம் கொண்டுவந்து பேசினார்.

—4-ம் பக்கம் பார்க்க

## உண்ணாவிரதம் பிரார்த்தனையில் கலந்துகொள்ளுமாறு தமிழ்மகளிருக்கு திருமதி அமிர்தலிங்கம் அழைப்பு

அவசரகாலச் சட்டத்தின் கீழ் அரசியல் காரணங்களுக்காக கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக சிறைவைக்கப்பட்டிருக்கும் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்களில் ஒருவராகிய திரு. ஈழவேந்தனையும், ஏனைய தமிழ் இளைஞர்களையும் விடுதலை செய்யுமாறு கோரியும், அவசரகாலச் சட்டத்தையும் ஏனைய அடக்கு முறைச்சட்டங்களையும் அகற்றுமாறு கோரியும் 9.12.79ல் இந்து, இஸ்லாமிய, கிறித்தவ ஆலயங்களில் நடைபெறும் உண்ணாவிரதத்திலும் பிரார்த்தனையிலும்— கலந்துகொள்ளுமாறு தமிழ் மகளிர்பேரவை உறுப்பினர்களையும் ஏனைய தமிழ் மகளிரையும் தமிழ் மகளிர் பேரவையின்செயலாளர் திருமதி மங்கை அமிர்தலிங்கம் அழைப்பு விடுத்துள்ளார்.

தலைமை இயக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆணைப்படியே இந்தஉண்ணாவிரதத்தில் தமிழ் மகளிர் பேரவை பங்கு பற்றுவதாக முடிவுசெய்யப் பட்டுள்ளதென்றுகுறிப்பிட்ட திருமதி அமிர்தலிங்கம், எதுவித காரணமுமின்றி அநியாயமாகச் சிறைவைக்கப்பட்டுள்ள இளைஞர்களை விடுதலை செய்யுமாறு ஆட்சியாளர்களின் மனச்சாட்சியை இடிக்கும் முகமாக நடைபெறவிருக்கும் இந்த மனித உரிமை நாள் பிரார்த்தனையில், துன்பத்துக்குள்ளாகும் இளைஞரின் பெற்றோர் மாத்திரமன்றி, மனித உரிமையில் நாட்டமுள்ள அனைத்து மகளிரும் கலந்து கொள்ள வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## பாரபட்சத்தின் மறுபெயர்தான் தார்மீகம்!

பொது எழுது வினைஞர் சேவைக்கு இவ்வருடம் 114 பேர் எடுக்கப்பட்டனர். ஆனால் அவர்களில் 2 பேர் மட்டுமே தமிழர்கள். இது குறித்து நான் ஜனாதிபதிக்கு எழுதியும் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை.

புதிதாக 2500 பேர் எடுக்கப்பட்டதில் 90 பேர் மட்டுமே தமிழர்கள், இதை 4 வீதம் என்றுகணக்கிடலாம் ஆனால் நாட்டின் சனத்தொகையில் 28 வீதம் தமிழர்கள் வாழ்கிறார்கள்.

தட்டெழுத்தாளர்களாக 100 பேர் எடுக்கப்பட்டனர் அதில் 5 பேர்தான் தமிழர்கள்.

நீதிநியாயத்தின்படி அரசு நடப்பதாகக் கூறுவதெல்லாம்வெறுங்கண்துடைப்பே

—பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம்,

## சம்பந்தன், இரகுபதி; விடுதலை

அவசரகாலச் சட்டத்தின்கீழ் ஏறத்தாழ கடந்த மூன்று மாதங்களாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழ்த் தொழிற் சங்கக் கூட்டணியின் செயலாளர் நாயகம் ஐ.தி, சம்பந்தன் தமிழ் இளைஞர் பேரவையின் முன்னாள் தலைவர் ஆ. ரகுபதிபாலசிறீதரன் ஆகியோர் 1.12.79ல் விடுதலை செய்யப்பட்டனர்.

தமிழ் தொழிற் சங்கத் தலைவரான திரு, சம்பந்தன் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபை உறுப்பினருமாவார், இந்து இளைஞர்பேரவையின் சார்பில் அலகாபாத்தில் நடைபெற்ற அகில உலக இந்து மாநாட்டில்பங்கு பற்றியவர் திரு. சம்பந்தன்.

மூன்றுமாத தடுப்புக்காவலின்பின் தாடியும் மீசையுமாக காட்சியளித்த திரு. சம்பந்தன் சுதந்திரனுக்கு அளித்த பேட்டியில், சிறைவாழ்வினால் தாம் துவண்டு போய் விடவில்லை யென்றும் தொடர்ந்தும் தொழிற் சங்கப் பணியிலும். அஹிம்சை வழியில் இனவிடுதலைப்பணியிலும் ஈடுபடப் போவதாகத் தெரிவித்தார். தமது விடுதலையைக் கோரி குரல் கொடுத்த அனைவருக்கும் திரு. சம்பந்தன் தமது நன்றியைத் தெரிவித்தார்.

மற்றோர் தொழிற் சங்கத் தலைவரும் தமிழர் விடுதலை கூட்டணியின் மத்திய செயற்குழு உறுப்பினருமான திரு, ஈழவேந்தன் இன்னும் விடுதலை செய்யப் படவில்லை.

## தமிழர் அடிமைகளாக கொண்டுவரப்பட்டவராம்!

### தமிழா! இதோ யூ. என். பி.யின் தார்மீகம்!

திரு. காமினி அத்துக்கோரளை (யூ.என்.பி):—

"இலங்கை சிங்களவர்களின் நாடு. இங்கு ஒரு போதும் தமிழர்களின்அரசு இருந்ததில்லை. ஆனால் தமிழர்கள் இங்கு அடிமைகளாகக் கொண்டுவரப்பட்டவர்கள் என்பது மட்டும் எமக்குத் தெரியும்"

—பாராளுமன்றத்தில் (வீரகேசரி 24.11.79)

அமைச்சர் லயனல் ஜெயதிலக:— (திரு. கதிரவேற்பிள்ளையைப் பார்த்து) "நீங்கள் தென்னிந்திய இராச்சியத்திலிருந்து இங்கு வந்து, சிங்களவர் வசமிருந்த யாழ்குடாநாட்டை பலாத்காரமாக அபகரித்து அங்கிருந்த பழையநினைவுச்சின்னங்களையும் கோவில்களையும் தகோபாக்களையும்மற்றும்அமைப்புக்களையும் அழித்துவிட்டீர்கள்.

—பாராளுமன்றத்தில் (22.11.79)

## அவசரகாலச்சட்டம் இன்றுடன் 142

## "தமிழ் ஈழத்தில் சிங்கள இனத்தின் முதலாவது தூதுவர்"

### யாழ் அரச அதிபர் பற்றி பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர்

யாழ்ப்பாணத்தில் மட்டுமே தமிழர் ஒருவர் அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆனால் அவருக்கு நிர்வாகம் தெரியுமோஎன்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் ஈழத்தில் சிங்கள இனத்தின் முதலாவது தூதுவராக அவரை நியமிப்பதற்கு இப்பொழுதே அரசினால் அவருக்குப் பயிற்சிகொடுக்கப் படுவதுபோல எனக்குத் தோன்றுகிறது,'

—பாராளுமன்றத்தில் அ. அமிர்தலிங்கம் (2.12.79)

# ஒரே குடும்பத்தில் ஒரே நேரத்தில் 5 பேருக்கு ஆசிரிய நியமனம்!

## இதுதானா சமதர்மம் இதுதானா தார்மீகம்?

### பாராளுமன்றத்தில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் கேள்வி!

"இன்று இந்த அரசாங்கத்தில் கால் அமைச்சர்கள் அரை அமைச்சர்கள். முக்கால் அமைச்சர்கள், முழு அமைச்சர்கள் இருக்கிறார்கள் என்று மக்கள் சொல்கிறார்கள். மக்கள் சொல்வதைத்தான் நான் சொல்கிறேன். இன்று 82 அமைச்சர்கள் இந்த அரசாங்கத்தில் இருக்கிறார்கள். இந்நாட்டில் இதுவரையில் இவ்வளவு தொகையான அமைச்சர்கள் இருந்தது கிடையாது, முன்னர் மூன்று வகையான அமைச்சர்கள் இருந்தார்கள்; இப்பொழுது ஐந்து வகையான அமைச்சர்கள் இருக்கிறார்கள். அமைச்சர்கள் வகையும் கூட்டப்பட்டிருக்கிறது அமைச்சர் தொகையும் கூட்டப்பட்டிருக்கிறது. மாவட்ட அமைச்சர்களைக் கால் அமைச்சர்கள் என்றும் பிரதி அமைச்சர்களை அரை அமைச்சர்கள் என்றும் அமைச்சரவையில் இல்லாத அமைச்சர்களை முக்கால் அமைச்சர்கள் என்றும் ஏனைய அமைச்சர்களை முழு அமைச்சர்கள் என்றும் சொல்கிறார்கள்.

இங்கு 82 அமைச்சர்கள் இருக்கிறார்கள். இந்தத் தொகையும் கூட்டப்படலாம் என்ற கருத்து மக்களிடையே நிலவுகின்றது. ஆறு மாவட்டங்களுக்குப் பொறுப்பாக ஒரு பிரதேச அமைச்சர் நியமிக்கப்பட்டிருக்கிறார். 24 மாவட்டங்களை ஆறு ஆறாகப் பிரித்தால் மூன்று பிரதேச அமைச்சர்களுக்கு இடமிருக்கிறது, அதுபோல மாகாண அமைச்சர்களை நியமித்தால் 9 மாகாண அமைச்சர்களை நியமிக்கலாம்; ஆகவே இந்த அமைச்சரவை அடுத்த ஆண்டு மூன்றுதானத்தை, அதாவது 100 ஐ எட்டிப்பிடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அபிவிருத்தி திட்டங்களுக்கு மிக இன்றியமையாதது ஊழல் அற்ற நிர்வாகம். இன்று துணிந்து சொல்கிறேன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக்காலத்திலும் பார்க்க இந்தக் காலத்தில் எங்கள் பகுதிகளில் ஊழல் பெருகிவிட்டது என்று சாதாரண மக்கள் பேசுகிறார்கள், இதை எவரும் மறுக்க முடியாது.

நீங்கள் இப்பொழுது ஒரு சனாதிபதிக் கமிஷனை நியமித்தால் இதை நிரூபிக்க நாங்கள் ஆயத்தமாக இருக்கிறோம்." ஆசிரிய நியமனங்கள் பெற்றவர்களை நாங்கள் நீக்கமாட்டோம். அவர்கள் கொடுத்த பணத்தைக் கூடத் திருப்பிக்கொடுக்க நாங்கள் உதவி செய்வோம்'' என்று நீங்கள் எங்களுக்கு ஒரு வாக்குறுதி கொடுக்க வேண்டும். அப்பொழுது எங்கள் பகுதிகளிலே ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டவர்கள் எத்தனையோ பேர் தாங்கள் ஏழுஎட்டாயிரம் கொடுத்தே உத்தியோகங்களை வாங்கினோம் என்று சொல்வார்கள். ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் இதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்றே நான் இதைச் சொல்லுகின்றேன்;

இந்த உண்மையைச் சொல்வதற்கு இதை விடப் பொருத்தமான வேறு எந்த இடமும் கிடையாது ஆனால் உண்மையைப் பேச நாங்கள் இங்கு வந்திருக்கிறோம். என்ன காரணம் கொண்டும் நாங்கள் உண்மையை மறுக்கவோ மறைக்கவோ முடியாது எங்கள் வாழ்வில் நாங்கள் உண்மைக்காகவே போராடி வருகின்றோம், நீங்கள் இதை ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த உண்மையை நீங்கள் மறுக்கலாம், அல்லது மறைக்கலாம். உண்மை உண்மைதான் தர்மம் தர்மம்தான். இன்று ஊழல் பெருகிக்கொண்டிருக்கிறது.

எல்லாப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் சமமாக நடத்துவோம் என்று அரசாங்கம் சொல்கிறது. யாழ்ப்பாணத்தில் என்ன நடக்கின்றது? தமிழ்ப் பகுதிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த 16 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆளுக்கு ஆயிரம் தொழில் வங்கி விண்ணப்பப் படிவங்களை நிரப்பி அனுப்பினோம். ஏறக்குறைய 4 படிவங்கள் நிரப்ப வேண்டும் தலைவர் அவர்களே, உங்களுக்கும் அனுபவம் இருக்கலாம் என நம்புகிறேன், நாங்கள் கவனமாக அவற்றை நிரப்பி அனுப்பினோம், அந்தப் படிவங்களை நிரப்பும்போது ஒரு நிபந்தனை இருந்தது. ஒரு குடும்பத்தில் ஒருவர் வேலையில் இருந்தால் மற்றக் குடும்ப உறுப்பினர்களுக்கு உத்தியோகம் கொடுக்க முடியாது, ஒரு நல்ல கருத்து சமதர்மக் கருத்து இது ஓர் அடிப்படை நிபந்தனை:

எனவே நாம் இதனைப் பின்பற்றி எத்தனையோ பேரின் வேதனையையும் வெறுப்பையும் தாங்கி 16,000 தொழிற்படிவங்களை நிரப்பி அனுப்பினோம். திட்டமிடல், நிறைவேற்று அமைச்சு எங்களுக்கனுப்பிய சுற்றிக்கையின் படி எழுத்துக்கு எழுத்து சரியாக நாம் நிரப்பி அனுப்பினோம், அந்தப் பதினாறாயிரம் படிவங்களுக்கும் என்ன நடந்தது? அவையெல்லாம் தூக்கி வீசப்பட்டன எங்கள் நேரம் வீணாக்கப்பட்டது, கடதாசி அச்சடித்தல் என்பவற்றுக்காக அரசாங்கம் எங்கள் பணத்தைத்தான் செலவு செய்தது அவையெல்லாம், தூக்கி வீசப்பட்டன.

இந்தமாதிரியான ஓர் அநியாயம், இந்த நாட்டின் ஓர் இனத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களை இவ்வாறு புறக்கணித்தது அவர்களைச் சிறுமைப் படுத்தியது. இந்த நாட்டின் அரசியல் வரலாற்றிலே இந்த அரசாங்கத்தால்தான் செய்யப்பட்டிருக்கிறதென்பதை எவரும் மறுக்கமுடியாது.

நாம் அந்தப் படிவங்களைக் கேட்கவில்லை. நீங்கள்தான் தந்தீர்கள். நாம் ஒத்துழைத்தோம். எங்களுக்கு ஆட்சி இருக்குமானால் நாம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் உத்தியோகம் கொடுக்க மாட்டோம். தகுதியுள்ளவர்களுக்குத்தான். கொடுப்போம். ஆசிரியர் நியமனத்தில் 15 பேரை நியமியுங்கள் என்று எங்களைக் கல்வி அமைச்சர் கேட்டார். 75 பேர் கொண்ட பட்டியலை அனுப்பியிருந்தார். 365 அல்லது 360க்கு மேல் புள்ளி எடுத்தவர்களின். திறமை காட்டியவர்களின், பட்டியலை எங்களுக்கு அனுப்பியிருந்தார்; அவர்களில் 15 பேரை நாம் வேறொரு நேர்முகப் பரீட்சை வைத்துத் தேர்ந்தெடுத்தோம். இந்த விடயத்தில் ஒருவராதல் எங்களை குறைசொல்ல முடியாது. தகுதியுள்ளவர்களைத் தான் நாம் எடுத்தோம் பின் என்ன நடந்தது?

ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு உத்தியோகம் இருக்குமென்றால் அந்தக் குடும்பத்தில் மற்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்யக் கூடாதென்று இந்த அரசாங்கமே சொன்னது. ஆனால் தலைவர் அவர்களே என்ன நடந்தது? ஒரு குடும்பத்தில் ஒரே நாளில் ஐந்து பேருக்கு ஆசிரிய நியமனம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றால் உங்கள் சமதர்மம் எங்கே? சமத்துவம் எங்கே? இந்த ஒன்றே ஒருமானமுள்ள், அரசியல் நாகரிகம் படைத்த ஓர் அரசாங்கத்துக்கு சவாலாக இருக்கிறது. இந்த ஒன்றின் காரணமாகவே இந்த அரசாங்கம் பதவியிலிருந்து விலகலாம். உண்மையான அரசியல் நாகரிகத்தைப் போற்றினால்,

ஒரு குடும்பம் மட்டுமல்ல இப்படி எத்தனையோ குடும்பங்களில் நடைபெற்றிருக்கின்றது. அந்த ஊழல் பெருத்து இன்று ஒரு கல்விச்சேவை ஆணைக்குழு நியமிக்கப்பட்டு அமைச்சரின் அதிகாரங்கள் யாவும்—நியமனங்கள் மாற்றங்கள் யாவும்— அந்த ஆணைக்குழுவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

என்னுடைய ஊரிலே சந்திகளில் கதைக்கிறார்கள் நான் எனக்கு உத்தியோகம் எடுத்தேன் என் அண்ணன் மனைவிக்கு உத்தியோகம் எடுத்தேன், என்னுடைய அடுத்த அண்ணன் மனைவிக்கு உத்தியோகம் எடுத்தேன் எங்கே உங்கள் பாராளுமன்ற உறுப்பினருக்கு ஓர் உத்தியோகமாவது எடுத்துக் கொடுக்க முடியுமா? என்று சந்திகளில் நின்று எங்களுக்குச் சவால் விடுகிறார்கள் காசு கொடுத்து உத்தியோகம் பெற்றவர்கள் நாமும் மானமுள்ளவர்கள் எங்களுக்கும் சுயமரியாதை இருக்கிறது. ஒவ்வொரு நாட்டு மகனுக்கும் உள்ள சுயமரியாதை எங்களுக்கும் இருக்கிறது; நாம் என்ன செய்யலாம்; இதுதான் இந்த அரசாங்கத்தின் அநியாயம். இதுதான் இந்த அரசாங்கத்தின் தர்மிஷ்டம் என்று நாம் எங்கள் மக்களுக்குச் சொல்ல வேண்டி இருக்கிறது:

# மீன் விற்பனையிலும் பாரபட்சமா?

## 'சீநோர்' மீன் யாழ் மக்களுக்கு கிடையாதாம்!

## கொழும்புக்கு அனுப்ப மீன்பிடி மந்திரி உத்தரவு!

காரைநகர் சீநோர் தாபனம், அவர்கள் படகுகளில் பிடிக்கப்படும் தரமான மீன் வகைகளை யாழ்ப்பாண மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும்நோக்கோடு யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியன மூலம் விற்பனை செய்ய முன் வந்தது. விற்பனைக்குரிய மீன்களை அவர்கள் மொத்தமாக அவர்களின் விற்பனை வாகன மூலம், சங்கங்கள் சில்லறையாக விற்பதற்கு அனுப்பிவைக்க ஒழுங்கு செய்து இவ்விற்பனைக்கு விரும்பிய ஒவ்வொரு சங்கத்தையும் நாளாந்த விற்பனைக்குத் தேவையான மீன் வகைகளையும் மொத்த ருத்தலையும் தெரிவிக்குமாறு 20.11.79 திகதியிட்ட கடித மூலம் காரைநகர் சீநோர் தாபனத்தின் மீன்பிடிப் பகுதி முகாமையாளர் பல சங்கங்களைக் கோரியிருந்தார்.

இக்கடிதம் 25.11.79இல் நடைபெற்ற மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க செயற்குழுக்கூட்டத்தில் ஆராயப்பட்டபோது மீன் விற்பனையை நடாத்துவது என்றும் சங்கத்தலைவர் திரு. சு. சிறீபாஸ்கரன் அவர்கள் சீநோர் தாபனத்திற்கு நேரில் சென்று விற்பனைக்கு வேண்டிய ஒழுங்குகளை செய்யவேண்டுமென்று திரு. செ. வேலாயுதபிள்ளை அவர்கள் தெரிவித்த கருத்து ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப் பட்டது.

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் சனிக்கிழமைகளில் நடாத்தும் இரவுச் சந்தையில் சீர்நோர் மீன் வகைகள் விற்கப்பட்டதும் அதனை வாங்க அயலூர்களிலுள்ளவர்கள்கூட முந்தியடித்துக்கொண்டு வந்ததும் விற்பனைக்குத் தேவையான முழுத்தொகை மீன்வகைகளை சீநோர் தாபனம் கொடுக்க முடியாமலிருந்ததும் பலர் அறிந்த விடயம், சீநோர் தாபனத்தின் முதல் வாடிக்கையாளர் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரே. மழை காரணத்தை முன்னிட்டு தைமாதம் வரை இரவுச் சந்தை தடுத்து வைக்கப்பட்டதும் தெரிந்ததே.

நாளாந்த விற்பனைக்குரிய ஒழுங்குகளைச் செய்வதற்காக மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. சு. சிறீபாஸ்கரன் அவர்கள் 26-11-79 காலை சீநோர் மீன்பிடி'' பகுதி முகாமையாளரைச் சந்தித்தார். அதற்கு முன்னர் காரைநகர், பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கங்களின் பிரதிநிதிகளும் இதுவிஷயமாக மீன்பிடிப் பகுதி முகாமையாளரைச் சந்தித்தனர். எல்லோருக்கும் கிடைத்தபதில் பின்வருமாறு:

''சென்ற வெள்ளிக்கிழமை (23.11.79) இங்கு விஜயம் செய்த மீன்பிடி மந்திரி யாழ்ப்பாணத்தில் போதிய மீன் இருப்பதால் சீநோர் பிடிக்கும் மீன்வகைகளில் ஊழியரைத்தவிர்ந்த எவருக்கேனும் ஒருமீன் தானும் விற்காது முழுவதையும் கொழும்புக்கு அனுப்புமாறு உத்தரவிட்டுள்ளார்.' அங்கு சென்றவர்கள் இப்பதிலுடன் ஏமாற்றத்துடன் திரும்பினார்கள்.

இதுபற்றி திரு. பாஸ்கரன் கருத்துத்தெரிவிக்கையில் ''மீன்பிடி மந்திரியின் உத்தரவு சர்வாதிகாரமானது-யாழ்ப்பாணத்தவருக்குப் போதிய மீன் கிடைப்பது இல்லை என்பதை மீன்விற்பனை செய்த எங்களுக்குத் தான் தெரியும். முதலாவது வாடிக்கையாளராக இருந்த எமது சங்கத்திற்கு மீன் தர மறுக்க முடியாது. மீனின் விலையையும் மந்திரி அவர்கள் நிர்ணயிக்க முன்வந்தது விசித்திரமானது. உதாரண

—4-ம் பக்கம் பார்க்க

# தமிழ்ஈழ மக்களின் தேவைக்கேற்ற வகையில் விஞ்ஞான சோசலிசத்தை கையாள்வோம்!

## இளைஞர் பேரவை ஆய்வரங்கில் அமிர்தலிங்கம் பேச்சு

சாதியை ஒழிப்பதற்குத் தமிழ் நாட்டிலே திராவிட இயக்கம் முன்னின்று கலப்புத் திருமணம் போன்ற பல்வேறு முறைகளையும் கைக்கொண்டார்கள். அவற்றை எமது நாட்டிலே சாதியை ஒழிக்கும் வழிகளாக நாம் கைக்கொள்ளத்தான் வேண்டும். சாதி என்பதை சமுதாயத்தில் எந்தத் துறையிலும் கைக்கொள்ளாத ஒரு நிலை ஏற்பட வேண்டும்.

நான் கூறியதுபோல் ஒருவேளை பொருளாதாரத் துறையிலே, கைத்தொழிற் துறையிலே எமது நாடு வளர்ந்துவரும் பொழுது தொழிலாளி — முதலாளி என்ற வர்க்கபேதம் ஏற்படலாம். அந்த வர்க்கபேதம் இன்றைக்கு அவ்வளவுதூரம் வளர்ச்சியடையவில்லை. ஏனென்றால் முதலாளித்துவமோ, கைத்தொழில் அபிவிருத்தியோ ஏற்படாத ஒரு நாட்டிலே இந்த வர்க்கப் பிரிவினை வளர்ச்சியடைய முடியாது. அதனால் தான் சோவியத் நாட்டிலே ஏற்பட்ட புரட்சிக்கும், சீனாவிலே ஏற்பட்டபுரட்சிக்கும் ஒரு அடிப்படை வித்தியாசம் இருக்கிறது.


சீனப் புரட்சியை மாசேதுங் விவசாயிகளை அச்சாணியாகக்கொண்டு நடத்தினார். ஆனால் லெனின் ரஷ்யப் புரட்சியை தொழிலாளர்களை முன்வைத்து நடத்தினார். ஏனென்றால் மொஸ்கோவிலே லெனின்கிரட் போன்ற பல நகரங்களிலும் பெருமளவு ஐரோப்பாவிலும் வளர்ச்சி பெற்றிருந்த அந்த வர்க்கப் பிரிவினை இருக்கத்தான்செய்கின்றது. ஆனபடியால் இவற்றை நாம் மனதிலே வைத்துக்கொண்டு மார்க்சிய சிந்தனையை, மார்க்சிய சித்தாந்தத்தை எமது நாட்டின் சூழ்நிலைக்கேற்ப, எமது நாட்டின் பிரச்சினைகளுக்கு ஏற்ப எப்படியெப்படி பிரயோகிக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டு நாம் அவற்றைச் செயற்படுத்த வேண்டும். முக்கியமாக, சாதி எங்களுக்குள்ள ஒரு பிரச்சினை. அதற்குப் பரிகாரம் நாம் காணவேண்டும். அதற்கு எந்த வகையிலே மார்க்சிய சிந்தனையை மாற்றியமைக்கலாம் என்பதை நாம் யோசிக்க வேண்டும்,

அதேபோல் இங்கே கைத்தொழிற்றுறையிலே அபிவிருத்தியடையாத எங்கள் சமூகத்தில் வர்க்கப்பிரிவினை அவ்வளவு இல்லை. ஆனால் விவசாயிகளின் பிரச்சினைகள் சாதி அடிப்படையாகக் கொண்ட பல்வேறுதொழில்களோடு தொடர்புடைய பிரச்சினைகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் திட்டமிட்ட ஒரு பொருளாதார அமைப்பின் மூலம் விசேடமாக உற்பத்தித் துறையினைத் தேசிய மயமாக்கி— எந்த எந்தச் சிறிய துறைகளிலே, எந்த எந்த அளவில் தனியார் துறையை உபயோகிக்க வேண்டுமோ அதை ஆரம்பக் கட்டத்திலே உபயோகித்து, அடிப்படையிலிருந்துசற்றும் மாற்றப்படாத வகையிலே நாம் செல்ல வேண்டும்.

யூகோசிலாவியாவில் சில சில துறைகளுக்கு தனியார் துறையை உபயோகிக்கிறார்கள். கிழக்கு ஜேர்மனியில் கூட சில துறைகளில் தனியார் துறைக்கு இடமளித்திருப்பதை நாம் காண்கிறோம். ஆனபடியால்தான் நான் ஆரம்பத்தில் பீடிகையாக கூறினேன். உலகிலே இன்னும் முற்று முழுதான கம்யூனிச நாடாக எதுவும் வந்துவிடவில்லையென்று; எங்கள் சிந்தனை தெளிவாக இருக்கின்றது. நாங்கள்— இடதுசாரிப் பத்திரிகைகள் சில எழுதியதுபோல் எந்த விதத்திலும் முதலாளிகள் அல்ல. உண்மையில் எங்களைப் பொறுத்தவரையிலே எந்த விதமான உடமைக்கும் அதிபதிகளாக நாங்கள் இருக்கவில்லை. எங்களுடைய கருத்தும் அப்படியானகருத்தல்ல.

ஒரு சீனசார்பு கம்யூனிசப் பத்திரிகை எழுதியது, முன்பு ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் தலைமை ஆங்கில நாட்டுக்குச் சார்பாக இருந்ததாம். தந்தை செல்வநாயகத்தின் தலைமை அமெரிக்காவுக்குச் சார்பாக இருந்ததாம். இன்று என்னுடைய தலைமை ரஷ்யாவுக்குச் சார்பாக சமூக ஏகாதிபத்தியத்துக்குச்சார்பாக இருக்கிறது என்று; அவர்கள் தங்களுடைய எண்ணம் போன வகையிலே எதை எழுதினாலும், எங்கள் சிந்தனை தெளிவாகத்தான் இருக்கின்றது. எங்கள் பிரச்சினைகளை நாங்கள் தெரிந்துவைத்திருக்கிறோம்.

மார்க்சிய அடிப்படையை நாம் ஏற்றுத்தான் எங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் விஞ்ஞான சோஷலிச அடிப்படையில் எங்கள் பொருளாதார அமைப்பு அமையுமென்று நாம் வெளிப்படுத்தினோம்; ஆனால் அந்த விஞ்ஞான சோஷலிசம் ஒவ்வொரு நாட்டில் ஒவ்வொரு விதமாக அந்த நாட்டினுடைய சூழ்நிலைக்கு அந்த நாட்டினுடைய தேவைக்கேற்ற விதமாகக் கையாளப்பட்டிருக்கின்றது. அதைத்தமிழீழத்தினுடைய மக்களின் தேவைக்கு ஏற்ற வகையிலே நாம் கையாள்வோம். ஆனால் அந்த அடிப்படையிலிருந்த வழுவாமல் அதற்கேற்ற அரசியல், சமூக பொருளாதார அமைப்பை ஏற்படுத்தி நாம் செயற்படுவோம். —முற்றும்



'மில்க்வைற்' - விபுலானந்த அடிகளாரின் சிறப்பு மலரைஅன்னாரின் மாணவர் யாழ்; பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், மில்க்வைற் அதிபரிடம் முதற் பிரதியை கையேற்பதையும், அருகில் செய்தி ஆசிரியர் திரு க.சி குலரத்தினம் நிற்பதையும் படத்தில் காண்க,

# "1400 ஆண்டுகளுக்கு முன்னரே அடிமைத்தனத்தை எதிர்த்தவர் நபிகள் நாயகம் (ஸல்)"

## ஹிஜ்ரி விழாவில் அமிர்தலிங்கம் பேச்சு

மத்திய கிழக்கில் பல மதங்கள் தோன்றின. ஆனால், உலகில் இஸ்லாம் மதம் ஏற்படுத்திய தாக்கத்தைப் போல வேறு எந்த மதமும் ஏற்படுத்தவில்லை.

என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் வியாழன் மாலை பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற ஹிஜ்ரி முத்திரை வெளியீட்டு விழாவையடுத்து நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் 60கோடிக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் இன்று உலகில் இருக்கின்றார்கள். முஸ்லிம்கள் தங்களது மதத்தின்மீது ஆழ்ந்த பற்றும், பிடிவாதமும் கொண்டுள்ளவர்களாவர். இதனால் மதக்கோட்பாடுகள் என்ன என்பதை எம்மால் அறிந்துகொள்ள முடியும்.

தமிழ் மொழியினால் இணைக்கப்பட்ட இஸ்லாமியச் சகோதரர்களின் ஒரு புனித விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் பாக்கியம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். 1400 வருடங்களுக்கு முன்னர் நபிகள் (ஸல்) அவர்கள் மனித சமுதாயம் சரியான பாதையில் செல்ல வேண்டும் என்பதைக் கருத்திற் கொண்டு மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றார்கள். இத்தினத்தை இன்று உலகெங்கும் கொண்டாடப்படுவதினால் மனித சமுதாயம் சரியான பாதையில் செல்ல வழிவகுக்கும்.

நான் இஸ்லாமியனாக இல்லாவிட்டாலும் ஆண்டவன் இருக்கின்றான் என்ற நம்பிக்கையுள்ள இந்து என்ற முறையில் இங்கு வந்துள்ளேன். இன்று மேற்கத்திய நாடுகள் அடிமைத்தன விடுதலை பற்றிக் கூறுகின்றன. ஆனால், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 1400 ஆண்டுகளுக்கு முன்னரே அடிமைத்தனத்திலிருந்து மனித சமுதாயம் விடுதலை பெறவேண்டுமெனவலியுறுதினார்கள். நபிகள்(ஸல்) அவர்கள் சகலரினதும் சுதந்திரத்துக்கு மதிப்பளித்தார்கள். மனிதாபிமானத்தையும் சகோதரத்துவத்தையும் போதித்தார்கள்.

அன்னார் அன்று போதித்த இஸ்லாம் மதம் இன்றும் இளமையோடு திகழ்கின்றது. இதனால் இன்று உலகெங்கும் மறுமலர்ச்சி ஏற்பட்டு வருகிறது. ஆகையால் உலகெங்கும் எல்லாச் சமயத்தவர்களும், இவ்விழாவைக்கொண்டாடுகின்றனர் என்றும் சொன்னார்.

# கல்குடாத் தொகுதியிலும் காடைத்தனம்

வடக்கில் மட்டுமன்றி கிழக்கிலும்—குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில பொதுமக்கள் பலத்த தாக்குதலுக்காளானதையிட்டுப் பாராளுமன்றத்தில் த.வி, கூட்டணி உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்துப் பேசியதை வாசகர்கள் இதற்குள் மறந்திருக்க மாட்டார்கள்.

ஆனால் எவ்வளவுதான் நமது பிரதிநிதிகள் கண்டித்துப் பேசினாலும், நாம் நமது சண்டித்தனத்தை நிறுத்தமாட்டோம் என்பதுபோல் தமிழர் பிரதேசங்களில் நிகழ்ச்சிகள் நடந்து வருகின்றன.

அண்மையில் கற்குடாத் தொகுதியைச் சேர்ந்த கோறளைப்பற்று வடக்கில் அப்பாவி மக்கள் பலர் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டுள்ளார்கள். அவர்களின் விபரம் வருமாறு,

1. கணபதி சீனித்தம்பி (கதிரவெளி)

3. திருமதி ராசா (கதிரவெளி)

3. சி. க. சிவலிங்கம், வெ. பஸ்கோல், சுந்தரம், வர்ணகுல சிங்கம் (புளியங்கண்டலடி)

4. திரு. த. மார்க்கண்டு (வாகரை)

5. திரு பொ. இராமச்சந்திரன். திருமதி இராமச்சந்திரன், க. சின்னத்தம்பி, சி. ஞானம் (வாகரை)

6, க. வீரக்குட்டி, பொ. கனகையா, செ. காத்தமுத்து, கண்ணமுத்து (பனிச்சங்கேணி)

7. திரு. சி. தம்பிமுத்துவும் அவரது குடும்பத்தினரும் (காயான் கேணி)

8, திரு. க. சீனித்தம்பி (ஆலங்குளம்)

9. வம்மிவட்டான் என்னும் ஊரில் வாழும் மலையக தமிழர் ஒருவர் (ரெயிலர் தொழில் செய்பவர்)

மேற்குறிப்பிட்டவர்களில் திருமதி இராமச்சந்திரன் என்பவர் அடிதாங்க முடியாது தமது பதின்மூன்று நாட் பச்சிளங் குழந்தையை வெளியில் போட்டுவிட்டு ஓடினார் என்றும் அறியப்படுகிறது.

## சூருவளி நிவாரண வேலைகள்;

# நீதியமைச்சரின் அதிகாரம் பறிமுதல்! இராசுவிடம் பொறுப்பு ஒப்படைப்பு

### தேவா - இராசு அதிகாரப் போட்டியில் தேவாவுக்குக் கழுத்தறுப்பு!

மட்டக்களப்பு மாவட்டத்தில் சூருவளி நிவாரண வேலைகளின் பொறுப்பு இதுகாலவரை நீதியமைச்சர் திரு.கே. டபிள்யூ.தேவநாயகத்திடமே ஒப்படைக்கப் பட்டிருந்ததல்லவா? இப்போது அந்த அதிகாரம் திரு. தேவநாயகத்திடமிருந்து பிடுங்கி எடுக்கப்பட்டு பிரதேச அபிவிருத்திஅமைச்சர் இராசதுரையிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது.

இதற்கான சுற்றுநிருபம் ஒன்றை ஜனாதிபதியேவிடுத்திருப்பதாகசெய்தியொன்று கூறுகிறது.

மட்டக்களப்புமாவட்டத்தில் சூருவளி நிவாரண வேலைகளுக்கு பொறுப்பாக ஒருஉயாமட்டக்குழுஇயங்கி வந்ததும் அந்தக்குழுவின் தலைவராக நீதியமைச்சர் கே. டபிள்யூ, தேவநாயகம் இதுகாலவரை பணியாற்றி வந்ததும் தெரிந்ததே. இப்போது திரு. தேவநாயகத்திடமிருந்து வந்த மேற்படி பொறுப்பு பிடுங்கி எடுக்கப்பட்டு பிராந்திய அமைச்சர் செல்லையா இராசதுரையிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளதாம்.

அதாவது செல்லையாஇராசதுரையின் தலைமையின் கீழேயே சூருவளி நிவாரண வேலைகள் நடைபெறும் நீதியமைச்சர் தேவநாயகம், மாவட்ட அமைச்சர் கனகரத்தினம் மட்டக்களப்பு இரண்டாவது எம்.பி. மீராலெவ்வை ஆகியோர் திரு. இராசதுரையின் கீழேயே இனிமேற்சூருவளி நிவாரண கடமைகளையாற்ற வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்துடன் அம்பாறை பொலன்னறுவ மாவட்டங்களின் சூருவளி நிவாரண வேலைகளுக்கும் பிராந்திய அமைச்சர் இராசதுரையே பொறுப்பாக இருப்பார் என்று 1,12,79 தினகரன் செய்திகூறுகிறது;

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராசதுரைக்கும் தேவநாயகத்துக்குமிடையே நடைபெற்றுவந்ததாக கூறப்பட்ட அதிகாரக்கயிறிழுப்புப் போட்டியில் தேவநாயகத்தை அதலபாதாளத்தில் திரு. இராசதுரை தள்ளிவீழ்த்திவிட்டதை இச்சம்பவம் உறுதிப்படுத்துவதாக திரு. இராசதுரையின் ஆதரவாளர்கள் குதூகலிக்கின்றனர்.

திரு. தேவநாயகத்தின் ஆதரவாளர்களோ முந்திவந்த செவியை பிந்திவந்த கொம்பு மறைக்கிறதென்றும் யூ.என்.பி.யின்சிரேட்ட உறுப்பினரான தேவநாயகத்தை கையாலாகாதவரென்ற அளவுக்கு அரசாங்கம் இவ்வளவு தூரம் சிறுமைப்படுத்துகிறதே யென்றும் குமுறுகின்றனர்.

## ஆபீஸ்பையனின் கேள்வி!



"பிரதமர் திரு, பிரேமதாசா அதிகாலை 4 மணியிலிருந்தே தமது கடமைகளை ஆற்றத் தொடங்குவதாகவும், பிரதமர் ஒருகர்மவீரர் என்றும் பாராளுமன்றத்தில் திரு வி,என், நவரத்தினம் பாராட்டியிருக்கிறார். சிங்கள மக்களுக்கு 1977. ஆடிப்பொதுத் தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு பிரதமர் அப்படி விசுவாசமாக உழைப்பதுபோல— தமிழ் மக்களுக்குக் கொடுத்த தமிழ்ஈழ விடுதலை இலட்சியத்துக்காகவும் அதைநிறைவேற்றவும்கூட்டணியிலுள்ள எத்தனை பா,உக்கள் விசுவாசத்துடன் உழைத்து வருகிறார்கள் என்று கேட்கிறான் நம் ஆபீஸ்பையன்,"

## பாராளுமன்றத்தில் 'சுதந்திரன்' பிரச்சினை!

துணைச்சபாநாயகர் அவர்களே,

வடமாகாணத்திலுள்ள அவசரகால நிலைப்பிரகடனத்தையொட்டிய சில பிரச்சினைகளை பிரதிப்பாதுகாப்பு அமைச்சரிடம் எழுப்புவதற்கு அறிவித்தல் கொடுத்திருந்தேன். இன்று பத்திரிகைத் தணிக்கை யாழ்ப்பாணத்தில் மட்டுமே அமுலில் இருக்கிறது. நாட்டின் அந்தப் பகுதியைப் பொறுத்தவரை ஒவ்வொன்றுமே தனித்துவமானதுதான். ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரியே அங்கு பத்திரிகைத் தணிக்கையையும் கவனித்து வருகிறார்.

தன்னுடைய அதிகாரம் எங்கு தொடங்குகிறது எங்கு முடிகிறது என்று தனக்கே தெரியாத அளவுக்கு— இந்தப் பிரமுகர் பல்வேறு அதிகாரங்களையும் தனக்குத் தானே வீம்புடன் எடுத்துக் கொண்டிருக்கிறார்.

இச்சபையிலே இப்பிரமுகருக்கு எதிராக நாம் பல புகார்களை சுமத்தியிருக்கிறோம். குறிப்பாக, எமது இயக்கத்தின் சார்பிலே வெளியிடப்படும் தமிழ் வாரமிரு முறை வெளியீடான சுதந்திரன்பத்திரிகை தொடர்பாக இவர்மீது புகார் செய்திருக்கிறோம்.

இந்தப்பிரமுகரை சுதந்திரன் பத்திரிகை நீதிமன்றத்தில் நிறுத்தியிருக்கிறது. கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் இச்சபையிலே நிகழ்த்தப்படும் உரைகளைக்கூட இப்பிரமுகர் தணிக்கை செய்வதாக இச்சபையின் சபாநாயகரிடம் புகார் செய்திருந்தார் நான் இந்தப் புதினப்பத்திரிகையை (சுதந்திரனை) இப்பிரமுகர் தணிக்கை செய்யும் முறைக்கு ஆட்சேபம் தெரிவிக்கிறேன்.

இப்பத்திரிகை பத்திரிகைக் கடைகளுக்கு ஒவ்வொரு செவ்வாயும், வெள்ளியும் சென்றடைகிறது. வெள்ளிக்கிழமைகளில் இப்பத்திரிகை வெளிவரவேண்டுமாயின். தணிக்கை அதிகாரி புதன் கிழமையே செய்திகளை அங்கீகரித்துக் கொடுத்தால் மட்டுமே வியாழக்கிழமை அவர்கள் அச்சிடமுடியும். இந்த ஒழுங்கு பின்பற்றப்பட்டால் மட்டுமே வெள்ளிக்கிழமைகளில் பத்திரிகை வெளிவர முடியும்.

கடந்த 21-11-79 புதன்கிழமை, இந்தப் பத்திரிகையின் ஆசிரியர், தகுதிவாய்ந்த அதிகாரியுடன் தொலைபேசியில் தொடர்புகொள்ள முயன்றிருக்கிறார், ஆனால் அவர் அகப்படவில்லை. இந்த வேலையைச் செய்வதற்கு வேறுயாராவது இருப்பார்களா என்று அறியவும் ஆசிரியர் முயன்றிருக்கிறார். ஆனால் அன்று ஒருவரும் இல்லை.

இம்மாதிரி தந்திர முறைகளைக்கையாண்டு, பத்திரிகை குறித்த நேரத்தில் வெளிவருவதைத்தடுக்க முயற்சிப்பது ஒரு குற்றமாகும்...... தணிக்கை செய்யப்பட்ட பத்திரிகையைக்கூட, குறித்தநேரத்தில் வெளிக்கொணர எம்மால் முடியாவிடின், பத்திரிகைச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம்என்பதற்கு எதுவித அர்த்தமும்இல்லையென்று கூறுவேன்.

தகுதிவாய்ந்த அதிகாரியும் சிலசட்டதிட்டங்களுக்கு அமைவாகவே வேலை செய்ய வேண்டும். அவர் தம்முடைய மனம்போனபடி வேலைசெய்யமுடியாது. அவர் சில சட்டங்களையும் பிரமாணங்களையும் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கவேண்டும்.

தகுதிவாய்ந்த அதிகாரி யாழ்ப்பாணத்தை விட்டுப் போகும்போது தனதுவேலையைக் கவனிக்கும் பொறுப்பை வேறு யாரிடமாவது ஒப்புவித்துச் செல்ல வேண்டும். இதை அந்த அதிகாரியின் கவனத்துக்கு அமைச்சர் கொண்டு வரவேண்டும்.

—மு. சிவசிதம்பரம் பா. உ
(பாராளுமன்றத்தில் 23-11-79)

## அரசின் மனச்...

—1-ம் பக்கத் தொடர்

தமிழ் மகளிர் பேரவை, திருமதி மங்கை அமிர்தலிங்கம் தலைமையில்கூடி, மனித உரிமை உண்ணாவிரதத்தில் கலந்துகொள்வது என்று முடிவு செய்துள்ளது. தமிழ மகளிர் பேரவையின் 500 தொண்டர்கள் இதிலே கலந்து கொள்வார்கள்.

### மட்டக்களப்பில்

மட்டக்களப்பில் மனித உரிமை இயக்கம் உண்ணாவிரதத்தை நடத்தும் பொறுப்பை கையேற்றுள்ளது. மட்டக்களப்பில் நடைபெறவிருக்கும் உண்ணாவிரதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பட்டிருப்புப் பா.உ. கணேசலிங்கம். கவிஞர் காசி ஆனந்தன், திரு. இரா. அம்பலவாணர் உட்பட பலர் பங்குபற்றுவார்கள்.

### யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரதம் நடைபெறும் இடங்கள்

இது சம்பந்தமாக இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் பின்வரும் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் டிசம்பர் 9-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மனித உரிமை தினமாகவும் ஓர் பிரார்த்தனை நாளாகவும் அனுஷ்டிக்க அன்று காலை 9.00 தொடக்கம் பிற்பகல் 2.00வரை பின்வரும் இடங்களில் ஒன்று கூடுங்கள்.

1. நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவில்
2. யாழ் ஆசனக்கோவில் (பெரிய கோவில்)
3. பெரியகடை முஹிய்யதீன் ஜும்மா மஸ்ஜித்.

அத்தோடு அன்று பிற்பகல் 3.00 மணியளவில் நல்லூர் கலியாண மண்டபத்தில் மனித உரிமைகள் பற்றிய பொதுக்கூட்டமும் நடைபெறும் அனைவரையும் இதில் பங்குகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

## மனித உரிமை மீறல்கள் குறித்து பிலிப்பைன்ஸ் அறிஞர் கண்டனம்

மனித அடிப்படைஜனநாயக உரிமைகளை உலக மன்றமான ஐ.நா. சபைவிரிவாகப் பிரகடனப்படுத்தியுள்ள பொழுதிலும் ஐ-நா. சபையில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகள் அனைத்தும் மேற்படி உரிமைகளை அங்கீகரித்திருப்பதாகவும் அவற்றை ஏற்றுத் தத்தம் நாடுகளில் அமுல் நடத்தி வருவதாகப் பெருமை பேசி வருகின்ற பொழுதிலும்கூட, புதினப் பத்திரிகைகள் யாவும் ஒன்றில் அரசினால் முகாமைப்படுத்தப் பட்டுள்ளன அல்லது கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அரசியல் கட்சிகளோ ஒன்றில் பேடிகளாக மாற்றப்படுகின்றன. அல்லது தடைசெய்யப்படுகின்றன.

"அநேகமான நாடுகளில் ஒரு தலைப்பட்சமுடிவாகவே மக்கள் கைது செய்யப்படுகிறார்கள். நீண்ட காலம் மனிதத்தன்மைக்கு மாறான நிலைவரங்களில் நீதி விசாரணை எதுவுமின்றி தடுப்புக்காவலில் வைத்திருக்கப்படுகின்றனர். கொடூரமான சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர். உத்தியோக பூர்வமான அங்கீகாரத்துடன் உத்தியோகப் பற்றற்ற மரண தண்டனைகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர்":

என்று இலங்கையில்இடம் பெற்ற சட்டஆசியமாநாட்டில் உரை நிகழ்த்துகையில், பிலிப்பைன்ஸ் நாட்டின் முன்னாள் நீதியமைச்சரும், சட்டத்துறைப் பேராசிரியரும் முன்னாள் மேலவை உறுப்பினருமாகிய திரு யொஸ்தியொக்னோ குறிப்பிட்டிருக்கிறார். தினசரிகளில் இடம்பெறாத அவரது இப்பேச்சு லங்கா காடியன் பத்திரிகைகளில் மட்டும் பிரத்தியேகமாக வெளியிடப்பட்டுள்ளது,

பேராசிரியர் யொஸ்தியொக்னோகுறிப்பிட்டுள்ள மனித உரிமைகள் மீதான மீறுதல்கள் யாவும்மேற்படி சட்ட ஆசிய மாநாட்டில் கலந்து கொண்ட பேராளர்களின் நாடுகளிலேயேஇடம் பெற்று வருவதாக ஊகிக்க இடமுண்டு.

## மீன் விற்பனை —

—2-ம் பக்கத் தொடர்

மாக சீநோர்தாபனம் மீனை அவர்களது வாகனத்தில் கொழும்புக்குக் கொண்டு சென்று அங்கு கலவன் மீனை இருத்தல் ரூ. 2-50 சதமாக விற்கவேண்டுமாம். ஆனால் எமது சங்கத்தினர் எமது வாகனத்தில் காரை நகர் சென்று கலவன் மீனுக்கு இருத்தல் ஒன்றிற்கு ரூபா. 2.50 சதமாக வாங்கி ரூபா 3.00 ஆக விற்றோம். மீன் விற்பனையிலும் இனப்பாகுபாடு புகுந்தது ஆச்சரியமாயுள்ளது. எமது இரவுச் சந்தையில் 500 இருத்தலுக்கு மேல் மீன் விற்கமுடியுமென்றால் யாழ்ப்பாணத்தவருக்குப் போதிய மீன் கிடைப்பதில்லை என்பது தெளிவாகும். விலை ஒருபுறமிருக்க போதியளவு தரமான மீன்வகைகள்கிடைக்க வேண்டும். யாழ்ப்பாண மீனவருக்கு கைகொடுத்து உதவ அரசு முன்வரவில்லை. எனவே யாழ்ப்பாணத்தில் பிடிக்கும் மீன் இப்பகுதியினரின் தேவையைப் பூர்த்தி செய்தபின் எஞ்சியிருப்பின் ஏற்றுமதி செய்யலாம்.

இதுபற்றி எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ அமிர்தலிங்கம் அவர்களுக்கும், வட்டுக்கோட்டை, ஊர்காவற்றுறை, பருத்தித்துறை ஆகிய தொகுதிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இவ்விஷயத்தில் நடவடிக்கை எடுக்குமாறு எழுதியுள்ளேன்"

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டட்டாரால் யாழ்ப்பாணம் மகாத்மா காந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1979ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5 ம் திகதி புதன்கிழமைஅச்சிட்டு வெளியிடப்பட்டது,